©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ.0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 22] சென்னை, புதன்கிழமை, ஜூன் 1, 2016
வைகாசி 19, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 135, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M1)த் துறை, 24 ஆகஸ்ட் 2015, ஆவணி 7, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2046.]*

**படிக்கவும்:–**

1. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 07–06–1991 ஆம் நாளிட்ட 175 ஆம் (நிலை) எண்ணிட்ட அரசாணை.

2. புதுதில்லியிலுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையர்–II (விதி விலக்கு) யிடமிருந்து வரப்பெற்ற 25–10–2011 ஆம் நாளிட்ட E-III/18(3)/09/TN/Cancellation/Exem/15547ஆம் எண்ணிட்ட கடிதம்.

**ஆணை:**–எண் 135, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M1)த் துறை, 24 ஆகஸ்ட் 2015, ஆவணி 7, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2046.]

திருவாளர், கிங் மற்றும் பாட்ரிட்ஜ், சென்னை நிறுவனத்திற்கு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை வழிவகைகள் சட்டம், 17(1) ஆம் பிரிவின் கீழ், 03–07–1991 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்,* பாகம்–II, பிரிவு–2 இல், 438–439ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட II(2)/தொ.வே.வா/3653/91 ஆம் எண் அறிவிக்கையில் விலக்களிக்கப்பட்டுள்ளதாலும்,

மேற்சொன்ன நிறுவனம் விலக்களிப்பு குறித்த கட்டுப்பாட்டு நிபந்தனைகளை மீறி, நிதி நிருவாகத்தில் முறைகேடுகளைச் செய்துள்ளதாலும்,

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை வழிவகைகள் சட்டத்தின் 17(4) ஆம் பிரிவின் கீழ், மேற்சொன்ன நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விலக்களிப்பினை, 31–08–2006 நாளிலிருந்து ரத்து செய்வதற்கான அறிவிக்கையை வெளியிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்று புது தில்லி, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையர்–II பரிந்துரை செய்துள்ளதாலும்,

எனவே, தற்போது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை வழிவகைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 19/1952) 17 ஆம் பிரிவினைச் சேர்ந்த 4 ஆம் உட்பிரிவின் (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் 17ஆம் பிரிவினைச் சேர்ந்த 1ஆம் உட்பிரிவின் (a) பகுதியின் கீழ், திருவாளர்கள் கிங் மற்றும் பாட்ரிட்ஜ், சென்னை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விலக்களிப்பினை 31–08–2006 ஆம் நாளிலிருந்து இதனால் ரத்து செய்கிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

***குமார் ஜெயந்த்,***
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.